Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ஸு செப்டெம்பர் ம்ீ 12உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 26

## யுத்த நிலையைப்பற்றி, மிஸ்டர் சர்ச்சில் பேச்சு.

### ரஷ்யாவின் அற்புதப் போராட்டம்.

### இரானைப் பிடித்ததன் முக்கியம்.

### அட்லாண்டிக் கூட்டறிக்கையும், இந்தியாவும்.

பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், சென்ற செவ்வாய்க்கிழமை, யுத்த நிலைமையைப் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபையில் ஒரு பிரசங்கம் செய்தார். முதலில், தான் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டைச் சந்தித்துப் பேசியதைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, சந்தித்ததன் பயனாக வெளியிடப்பட்ட 8 விஷய கூட்டறிக்கையின் அர்த்தத்தைப் பற்றி விளக்கிக் கூறினார். அவர் கூறியதன் சாரமாவது :—

"கூட்டறிக்கையின் கொள்கையும், அதன் வார்த்தைகளும், பிரிட்டிஷ் குடியரசு மக்களுக்கும், அமெரிக்கக் குடியரசு மக்களுக்கும் இதற்கு முன்பே பழக்கமாயிருந்தாலும், அது இரண்டு நாடுகளின் கூட்டறிக்கை என்பதும், மனித சரித்திரத்திலேயே முக்கியமானதாய் விளங்குகிறதென்பதும், வெற்றியடைந்த பிறகு அது நிரந்தரமான ஒரு அம்சமாக விளங்குமென்பதும், விளக்கமாகத் தெரிய வேண்டிய விஷயம். அதில் முக்கியமான சில வார்த்தைகளை நான் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 'நாஸிகளின் கொடுங்கோன்மை கடைசியாக ஒழிக்கப்பட்ட பிறகு' என்ற வார்த்தைகள், எங்களுடைய கூட்டு உடன்படிக்கையின் ஆழ்ந்த கருத்தையும், முக்கியமான நோக்கத்தையும், காண்பிக்கின்றன

"இந்தக் கூட்டறிக்கையைப்பற்றி சில கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஆகையால் சில விஷயங்களை விளக்கமாகச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. முதலாவது, இந்த அறிக்கை ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எப்படி அமுலுக்குக்கொண்டு வரப்படும் என்பதைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. யுத்தத்திற்குப்பிறகு ஏற்படப்போகும் பலவிதமான சந்தர்ப்பங்களில் என்ன செய்யவேண்டும் என்ற விஷயத்தை இப்போதே முடிவுசெய்துவிடுவது அவ்வளவு புத்திசாலித்தனமான காரியமல்ல.

### இந்தியாவுக்கு சம அந்தஸ்து.

"இரண்டாவதாக, இந்தியா, பர்மா, இதர ஏகாதிபத்திய நாடுகள் முதலியவைகளின் அரசியல் முன்னேற்றத்தைப்பற்றி, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இதுவரை வெளியிடப்பட்ட அறிக்கைகளை, இந்தக் கூட்டறிக்கை எந்த விதத்திலும் பாதிக்காது, 1940-ம் ஸு ஆகஸ்ட்டு ம்ீ வெளியிட்ட அறிக்கையின்படி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியாவுக்கு சம அந்தஸ்தும் உரிமையும் பெற பிரிட்டிஷ் அரசாங்கம் உதவி செய்வதற்கு வாக்குறுதி யளித்திருக்கிறது. இந்தியாவில் உள்ள பலவேறுபட்ட மதங்கள், வகுப்புகள், முதலியவைகளுக்கு அரசாங்கத்தாருக்கு உள்ள பொறுப்புகளைக் கவனித்து இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும்.

"பர்மாவில் சுயாட்சி ஏற்படுத்துவது சம்பந்தமாக, அரசாங்கத்தார் இப்போது உள்ள கொள்கை கையாளப்படும்.

"அட்லாண்டிக்கடல் சந்திப்பில், நாஸிகளுடைய கொடுங்கோலாட்சியின் கீழ் கஷ்டப்படும் நாடுகளின் சுதந்தரம், சுயாட்சி, தேசீய வாழ்க்கை, இவைகளைப் பற்றித்தான் நாங்கள் கவனித்தோம், பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் இருக்கும் பிரதேசங்களுக்கு, சுயாட்சி ஸ்தானங்களின் மூலமாக நாளடைவில் சுயாட்சி பெறும் தன்மையை அடையச்செய்வது இதற்குச் சம்பந்தமில்லாத தனிப்பட்ட பிரச்சினை. இது சம்பந்தமாக, யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லாமல், அரசாங்கத்தார் தங்களுடைய கொள்கையை அறிக்கைகள் மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கைகளுக்கும் இந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ள சுதந்தரம், நியாயம் என்ற கொள்கைகளுக்கும் ஒற்றுமையும், உடன்பாடும் இருப்பது நன்றாகப்புலப்படும்."

### அட்லாண்டிக் யுத்தம்.

அட்லாண்டிக் கடல் யுத்தத்தைப்பற்றி, மிஸ்டர் சர்ச்சில் அடுத்தபடியாகக் குறிப்பிட்டார். அவர் கூறியதன் சாரமாவது :—வடக்கு அட்லாண்டிக் கடலில், அமெரிக்கா எதிரிகளுடைய முயற்சியைத் தடுத்துக்கொண்டுவருகிறது அதனால் தெற்கு அட்லாண்டிக் கடலில், அவர்கள் தங்களுடைய கொடூரங்களைக் காட்ட முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய சூழ்ச்சி எந்த அளவுக்கு வெற்றிபெற்றது, எந்த அளவுக்கு தோல்வியடைந்தது, என்ற விஷயம் எதிரிகளுக்குத் தெரியாமல் இருக்கவேண்டியது அவசியம். ஆகையால் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கப்பல் நஷ்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை. முன்னிருந்த பிரிட்டிஷ் கப்பல் நஷ்டம் இப்போது கிடையாது. சென்ற மூன்று மாதங்களும் நாசமாக்கப்பட்ட ஜெர்மன் கப்பல்களும், இத்தாலியக் கப்பல்களும், அதிகப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம், பிரிட்டிஷ் விமான வெடிகுண்டு படையின் தந்திரப்போர் முறைகளும், பிரிட்டிஷ் கரையோர விமானப் படையின் புதிய போர் திட்டங்களுந்தான் இதல்லாமல், பிரிட்டிஷ் சப்மரீன்களும் தங்களுடைய வேலையைச் சரியாகச் செய்து வருகின்றன. 1941-ம் வருஷத்தில் 17 எதிரி கப்பல்களையும், 105 சப்ளை கப்பல்களையும், பிரிட்டிஷ் சப்மரீன்கள் தாக்கி நாசமாக்கிவிட்டன. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் முழுகடிக்கப்பட்ட எதிரிக் கப்பல்கள், முழுகடிக்கப்பட்ட பிரிட்டிஷ் கப்பல்களை விட மூன்று பங்கு அதிகப்படியாயிருந்தன.

அட்லாண்டிக் கடலில் அமெரிக்காவின் பலம் பொருந்திய கப்பற்படை செய்துவரும் பெரிய பாதுகாப்பு உதவியைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டுவிட்டு, பிறகு கூறியதாவது :—ஜெர்மானியர்களுக்கு இது ஒரு பெருந் தொல்லையாக இருக்கிறது. ஆனால் அமெரிக்காவை விரோதித்துக்கொள்ள ஹிட்லருக்கு இப்போது எண்ணமில்லை. "ஒன்றன்பின் ஒன்றாக" என்ற முறையின்படி, ரஷ்யா, பிரிட்டன், இவைகளை முடித்துவிட்ட பிறகுதான் அமெரிக்காவின்மேல் ஹிட்லரால் கண்ணோட்டம் செலுத்தமுடியும். ஆனால், இப்போது அமெரிக்காவிலிருந்து ஏராளமான யுத்த சாமான்கள் அட்லாண்டிக் கடல்வழியாக, பிரிட்டனுக்கு வந்துகொண்டேயிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு ஹிட்லர் முயற்சிக்கலாம். அப்போது அட்லாண்டிக் கடல் முழுவதும் யுத்த அரங்கமாக மாறிவிடும். இந்த சந்தர்ப்பத்தில், அட்லாண்டிக்கடல் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டதாக வீண் பெருமையடிக்கக்கூடாது.

இராக்கிலும், கிரீட்டிலும், நடந்த சம்பவங்களைப் பற்றி மிஸ்டர் சர்ச்சில் பேசிவிட்டு, சிரியாவில் விஷி அரசாங்கத்துடன் கலந்துகொண்டு ஜெர்மானியர்கள் செய்த சூழ்ச்சிகளைப்பற்றிக் கூறினார். மேலும் அவர் சொன்னதாவது :—சுதந்தரப் பிரெஞ்சுத் துருப்புகளும், பிரிட்டிஷ் துருப்புகளும், சிரியாவின்மேல்

படையெடுக்க வேண்டியதாய்விட்டது. இந்தச்சண்டையில் ஆஸ்திரேலியத் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் அடிக்கடி தங்களுடைய திறமையைக்காட்டி, பெருமைமிகுந்த காரியங்களைச் செய்தன. பிரிட்டனுக்கு சிரியாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காகத்தான் சிரியாவில் பிரவேசித்தோமே ஒழிய, பிரெஞ்சுக் காரர்களுக்குப் பதிலாக பிரிட்டிஷார் அங்கு தலைமை ஸ்தானம் பெறவேண்டும் என்ற எண்ணத்தாலல்ல. சிரியா சிரியர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படும். இப்போதிருந்த அரசாங்கத்தில் சிரியர்கள் அதிகப்படியான பங்கெடுத்துக்கொள்ள தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். சிரியாவில் உள்ள விஷி அரசாங்கத்தின் உரிமைகளை பிரிட்டன் எந்த விதத்திலும் பாதிக்க விரும்பவில்லை.

### ரஷ்ய யுத்தம்

ரஷ்ய யுத்தத்தைப்பற்றி, மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—ரஷ்யாவில் சிறு யுத்தத்தை நடத்திவிட்டு காரியத்தை முடித்துவிடலாம் என்ற ஹிட்லரின் நம்பிக்கைகள் வீணாய் போய்விட்டன. மூன்றுமாதங்களுக்குள், ஜெர்மானியர்களின் ரத்தம் ரஷ்யாவில் ஏராளமாக சிந்தப்பட்டது. சென்றயுத்தத்தில் ஒரு வருஷத்தில் சிந்தப்பட்ட ரத்தம், இந்த மூன்று மாதங்களில் ஜெர்மானியர்கள் இழந்திருக்கிறார்கள். இப்போது கடுமையான குளிர்காலத்தில், ரஷ்யாவில் ஆர்டிக்கடலிலிருந்து கருங்கடல் வரைக்கும் ஜெர்மானியத்துருப்புகள் பராமரிக்கப்படவேண்டும், போக்குவரவு சாதனங்கள் சரியாயில்லாத நிலைமையில், கடுங் குளிரில் ரஷ்யர்கள் அடிக்கடி திருப்பித்தாக்கிக்கொண்டு வருவதை ஹிட்லரால் சமாளிக்க முடியுமா ?

ரஷ்யாவுக்கு அதிகவேகமாக வேண்டிய உதவி அனுப்பப்படுகிறது, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஸ்டாலினுக்கு அனுப்பிய செய்தியை நான் ஆதரித்தேன். ரஷ்யர்கள் மிக அற்புதமாக ஜெர்மானியர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியும், 'சப்ளை' சாமான்களும் இன்னும் விரைவாகவும், துரிதமாகவும் அனுப்புவதற்கும், மற்ற விஷயங்களைக் கவனிப்பதற்கும், மாஸ்கோவில் ஆங்கிலோ-அமெரிக்க—ரஷ்ய மகாநாடு கூடும். அதற்காக அமெரிக்காவிலிருந்து மிஸ்டர் ஹாரிமன் தலைமையில் ஒரு தூதுக்கோஷ்டி பிரிட்டனுக்கு வருகிறது. லார்டு பீவர் புரூக் தலைமையில் பிரிட்டனிலிருந்து ஒரு தூது கோஷ்டி, அமெரிக்கத்தூது கோஷ்டியுடன் மாஸ்கோவுக்குச் செல்லும். ரஷ்யாவினுடைய அவசியங்களுக்காக ஏராளமான வெடிகுண்டு சாமான்களை அனுப்பித் தியாகம் செய்வதற்கும் பிரிட்டன் தயாராயிருக்கவேண்டும்.

### ரஷ்யாவுக்குக் குறுக்குவழி.

மிஸ்டர் சர்ச்சில் அடுத்தபடியாக இரானைப் பற்றிப் பேசினார். அவர் கூறியதாவது :—இரான் ரஷ்யாவுக்குப் போவதற்குக் குறுக்குவழி. அதை ஜர்மன் வேவுகாரர்கள் மூலமாகக் கைப்பற்றுவதற்கு ஜெர்மனி முயற்சி செய்தது. ஏராளமான ஜெர்மானியர்களை யாத்திரீகர்களாக இரானுக்கு அனுப்பியது. ரஷ்யத் துருப்புகளும், பிரிட்டிஷ் துருப்புகளும் சேர்ந்து, இரானைக் கைப்பற்றியதால் இந்த முயற்சி கைகூடவில்லை. இரானைக் கைப்பற்றியதால், ரஷ்யப் பட்டாளத்தின் தெற்குப் படைகளோடு பிரிட்டிஷ் தரைப் படைகளும், விமானப் படைகளும், ஒன்று சேர சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது.

இதல்லாமல், ஜெர்மனி கிழக்கு நோக்கிச் செல்வதைத் தடுக்கும் கேடயமாக இரான் இப்போது விளங்குகிறது. யுத்தத்தில் பிரவேசிக்கும் புகழ்பெற்ற இந்தியப் பட்டாளங்கள் இரானைப் பாதுகாத்து, இந்தியாவிலிருந்து யுத்தத்தை 1,000 மைலுக்கப்பால் ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கும் வேலையைச் செய்துவரும்.

பிறகு, மிஸ்டர் சர்ச்சில் சென்ற வருஷத்தின் நிலைமையையும், இந்த வருஷத்தின் பலம் பொருந்திய நிலைமையையும் ஒப்பிட்டுக் காட்டினார். 100,000 சிப்பாய்களிலிருந்து இப்போது 700,000 சிப்பாய்கள் தயார் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது யுத்த சாமான்கள் ஏராளமாக இருக்கின்றன. யுத்தம் ஆரம்பிக்கும்போது இருந்த ஆகாய விமானப்படை இப்போது இரட்டிப்பாய்விட்டது. இன்னும் விமானப்படை அதிகரிக்கப்பட்டுவருகிறது. பிரிட்டனின் பலத்தைக் கூறிவிட்டு முடிவில் மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—

" இது பெருமைகொள்வதற்குக் காலமல்ல. ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லலாம். சென்ற வருஷம் நமது நிலைமை கேவலமாய் இருந்ததென்று மற்றெல்லோரும் நினைக்கும்படியாய் இருந்தது. ஆனால் இப்போது பிரமித்து நிற்கும் உலக முன்னிலையில், 'எங்களுடைய வருங்கால வாழ்வுக்கு நாங்களேதான் அதிகாரிகள். எங்களுடைய ஆத்மாவின் தலைமை எங்களிடம் தான் இருக்கிறது' என்று கூறும் நிலைமையில் இருக்கிறோம்."

## இரான் ஒப்பந்தம்.
### ரஷ்யாவுக்குக் குறுக்கு வழி.

இரானிலிருந்து ஜெர்மானியர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள். இரான் அரசாங்கம் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டது. முதலில் கொஞ்சம் தகராறு இருந்தபோதிலும், கடைசியில் பிரிட்டனும் ரஷ்யாவும் கேட்டவைகளை இரான் ஒப்புக்கொண்டது ஒரு முக்கியமான சம்பவம். ஜெர்மனி, இத்தாலி முதலிய அச்சு நாடுகளின் ஸ்தானீகர் காரியாலயம் இனிமேல் மூடப்படும்.

எண்ணெய்க் கிணறுகள் இருக்கும் சுல்தானபாத்துக்கு இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நேச தேசத்துருப்புகள் வடக்கிலும், மேற்கிலும் கேந்திரஸ்தானங்களைப் பாதுகாத்து வருகின்றன.

பால்கன் நாடுகளைக் கைப்பற்றிய மாதிரி இரானைக் கைப்பற்ற ஜெர்மனி என்னென்னமோ முயற்சி செய்தது. ஒன்றும் கை கூடவில்லை. ரஷ்யாவும், பிரிட்டனும் இரானில் பிரவேசித்து ஜெர்மனியின் சூழ்ச்சிகளை அழித்தன.

ரஷ்யாவுக்கு உதவி அனுப்புவதற்கு இரான் குறுக்கு வழி. இதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் தம்முடைய பார்லிமெண்டு பேச்சில் கூறினார். அவருடைய பிரசங்க சாரம் வேறோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

# இரண்டு வருஷ யுத்தப் போக்கு.
## பிரிட்டிஷ் படைகள் சாதித்தகாரியங்கள்.
### 12-மாதங்களில், ஹிட்லர் அடைந்த 5 தோல்விகள்.
### ரஷ்யப் பெருந்தீயில் அழிந்துவரும் ஜெர்மனியின் பலம்.

சென்ற வாரம், யுத்தத்தின் இரண்டாவது வருஷ முடிவு கொண்டாடப்பட்ட காலத்தில், நேசதேசத் தலைவர்கள் யுத்தத்தின் போக்கைப்பற்றி விவரித்துக் கூறியிருக்கிறார்கள். கொள்கைக்காக நடத்தப்படும் இந்தப் போராட்டம், வெற்றி காணும் வரையில் நடத்தப்படும் என்று அவர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். அப்படிக் கூறியவர்களுள் முக்கியமானவர் பிரிட்டிஷ் மந்திரியாகிய மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட், யுத்தத்திற்குப்பிறகு செய்யவேண்டிய நிர்மாண வேலைத்திட்டத்தின் சம்பந்தமான விஷயங்களெல்லாம், இவரிடம் மிஸ்டர் சர்ச்சில் ஒப்படைத்திருக்கிறார். "ராய்ட்டர்" சமாச்சார ஸ்தாபனத்துக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையில், யுத்தத்தைப்பற்றிய சில விஷயங்களைப்பற்றி, மிஸ்டர் கிரீன்வுட் குறிப்பிட்டிருக்கிறார். அதனுடைய சாரம் பின்வருமாறு :—

" முடிவான வெற்றி ஹிட்லருடைய பிடியிலிருந்து நழுவிப்போய்விட்டது. சென்ற பன்னிரண்டு மாதங்களில், அநேக நாடுகள் ஜெர்மனியின் அடிமைத்தனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன என்பது

உண்மைதான். ஆனால் கிழக்குப் போர்முனையில், ஒரு புதிய யுத்தத்தில் சிக்கிக்கொண்டு ஜெர்மனி திண்டாடுகிறது. ஏராளமான ஜெர்மன் வாலிபர்களும், கணக்கில்லாத யுத்த சாமான்களும், ரஷ்ய யுத்தத்தில் நாசமாய்க்கொண்டு வருகின்றன. இது இப்படியிருக்க, ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில், ஜெர்மனிக்கு விரோதமாக நாட்டு மக்கள் வெவ்வேறு வழிகளில் தங்களுடைய வெறுப்பைத் தெரிவித்துவருகிறார்கள். யுத்தசாமான்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை யந்திரங்களை உடைத்தல், சாமான்கள் கொண்டு செல்லும்போது அவைகளை அழித்தல்,—இம்மாதிரியாக ஜெர்மனிக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

"சென்ற 12-மாதங்களில், ஹிட்லர் அடைந்த முக்கியமான தோல்விகள் ஐந்து. அவையாவன:-

(1) அமெரிக்கா பிரிட்டனுக்குச் செய்துவரும் பேருதவியை ஹிட்லரால் தடுக்க முடியவில்லை.

(2) இராக்கில் செய்த கலகம் ஹிட்லருக்குப் பிரயோசனப்படவில்லை.

(3) சிரியாவில் செய்த சூழ்ச்சிகள் யாதொரு பயனும் இல்லாமல் அழிந்துபோய்விட்டன.

(4) இரான் அல்லது பாரசீகத்தை ஜெர்மன் வேவுகாரர்களின் மூலமாகக் கைப்பற்ற நினைத்த ஹிட்லரின் எண்ணம் வீணாய்ப்போய்விட்டது.

(5) ரஷ்யாவை எதிர்த்து விரைவாக வெற்றி பெறவேண்டும் என்ற ஆசை நிராசையாய்விட்டது.

## மூன்றாவது மழைக்காலம்.

"இப்போது யுத்தத்தின் மூன்றாவது மழைக்காலம் தொடங்கப்போகிறது. ஜெர்மனியில் உள்ள மக்கள் இன்னும் அதிகமான கஷ்டங்களுக்கு உள்ளாகவேண்டுமென்று பயந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், பிரிட்டனின் நிலைமை என்ன? இப்போது பிரிட்டனுக்கு இருக்கிற பலம் யுத்தம் ஆரம்பித்தபிறகு எப்போதும் இருந்ததேயில்லை, விமானப் போரில் பிரிட்டன் தான் இப்போது முன்னேறிச் சண்டைசெய்கிறது. கூடிய சீக்கிரம் ஜெர்மனியைவிட அதிகமான விமான பலத்தை பிரிட்டன் அடையப் பாகிறது. அரசியல் துறையில், ஹிட்லருடைய "புதிய சமுதாயத்திட்டத்"தைப் பற்றி செய்துவந்த பிரசாரம், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டும், மிஸ்டர் சர்ச்சிலும் வெளியிட்ட சுதந்தரக் கூட்டறிக்கையினால், இருந்த இடம் தெரியாமல் செய்யப்பட்டது.

"மூன்றாவது வருஷ ஆரம்பத்தில், பிரிட்டன் மிகுந்த தைரியத்தோடும், பலத்தோடும் போர் முனையை நோக்குகிறது. பிரிட்டனுடைய யுத்த முகப்பு உடைக்கப்படாமல் இருக்கிறது. எதிர்த்துத் தாக்கும் பலம் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம், அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. நாஜிக் கொடுங்கோன்மையை அழித்து முடிவில் கட்டாயம் வெற்றி பெறுவோம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை பிரிட்டனுக்கு இருக்கிறது. ஹிட்லருடைய யுத்த தளவாடங்களும், யுத்த சாமான் 'சப்ளை'களும், குறைந்துகொண்டே போகின்றன. ஆனால் பிரிட்டனுடைய ஆயுத பலம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. எதிர்த்துத்தாக்கும் பலம் இன்னும் உச்ச நிலையை அடையவில்லை. ஆனால் உச்ச நிலையை நோக்கி நேசதேசத்தார்களுடைய பலம் விரைவாகப் போய்க்கொண்டிருக்கிறது. அநேக கஷ்டங்களை இனிமேல் அனுபவிக்கும்படி நேர்ந்தாலும் நேரலாம். ஆனால் ஒன்றுமாத்திரம் நிச்சயம்; ஹிட்லரிசத்தின் பலம் அடியோடு நாசமாக்கப்படுகிறவரையில், நாஜிக்கொடுங்கோன்மையின் தீமை வேரோடு அறுக்கப்படுகிறவரையில், இந்த யுத்தம் முடிவடையாது."

## பிரிட்டனின் கப்பற்படை.

மிஸ்டர் கிரீன்வுட்டின் நம்பிக்கையை இதர பிரிட்டிஷ் தலைவர்களும், நேசதேசத் தலைவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள். பிரிட்டனின் கப்பற்படை மந்திரி, மிஸ்டர் அலெக்சாண்டர் இதைப்பற்றிக் கூறுவதாவது :—

"டரேன்டோ, மடாபன், இந்த இரண்டு இடங்களிலும் பெற்ற கப்பல்படை வெற்றிகளும், கிரீசிலிருந்தும் கிரீட்டிலிருந்தும் அதிக சேதமில்லாமல் பிரிட்டிஷ் துருப்புகளும், நேசத்துருப்புகளும் கடல் வழியாக வெளியேறியதும், 'பிஸ்மார்க்' என்ற பிரம்மாண்டமான ஜெர்மன் யுத்தக் கப்பலை அழித்ததும், அட்லாண்டிக் கடலில் உள்ள எதிரி 'சப்மரீன்'களை (கடலுக்குள் செல்லும் கப்பல்களை) அதிகமாகத் தாக்கி வருவதும், பிரிட்டிஷ் கடற்படையின் பலத்தைக் காண்பிக்கின்றன. முடிவில் அடையப்போகும் சுதந்தர வெற்றியில், பிரிட்டிஷ் கடற்படை பலம் ஒரு பெரும் பங்கை எடுத்துக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை."

பிரிட்டிஷ் கடற்படையின் சாமர்த்தியங்களைப்பற்றி, ராய்ட்டரின் கப்பற்படை நிருபர் சில விவரங்களைக் கூறுகிறார். அவை பின்வருமாறு :—

இரண்டாவது வருஷ யுத்தத்தில், பிரிட்டிஷ் கடற்படையின் அதிகரிக்கும்படியான பலம், அது செய்த திறமையான காரியங்களிலிருந்து தெரிய வருகிறது, என்று கூறிவிட்டு 'பிஸ்மார்க்' என்ற பெரிய ஜெர்மன் கப்பலை முறியடித்தது முதலிய விஷயங்களை அவர் விவரமாகக் குறிப்பிடுகிறார். அவர் மேலும் கூறுவதாவது :—இந்த வெற்றிகளெல்லாம் முக்கியமானவையாயிருந்தாலும், நாள்தோறும் நடந்து கொண்டுவரும் சம்பவங்களும் எதிரியின் பலத்தைக் குறைத்துக்கொண்டு வருகின்றன. 'கான்வாய்' என்ற துணையுதவிக்கப்பல்களை ஜாக்கிரதையாகக் கொண்டுபோவது, எதிரிக்கப்பல்கள் செல்லும் வர்த்தக வழிகளில் பிரிட்டிஷ் வேவுகப்பல்கள் தொந்தரவு கொடுப்பது, கடலுக்கப்பாலிருந்து போர் புரியும் துருப்புகளுக்கு சாமான் 'சப்ளை'கள் கொண்டு போவது—இம்மாதிரியான வேலைகளை பிரிட்டிஷ் கப்பல் படை செய்துவருகிறது. முக்கியமாக அட்லாண்டிக்கடல் யுத்தத்தில் பிரிட்டிஷ் கப்பற்படையின் சிறு கப்பல்களும், நாசகாரிக்கப்பல்களும், உயிர் நிலை போன்ற வர்த்தக வழிகளைப் பாதுகாத்து வருகின்றன. ஒரு நாசகாரிக்கப்பல் யுத்த ஆரம்பத்திலிருந்து இது வரைக்கும் ஒரு லட்சம் மைல் சென்றிருக்கிறது. கடலோரத்தில் செல்லும் எதிர்க் கப்பல்களுக்கு, பிரிட்டிஷ் சப்மரீன்கள் தொந்தரவு கொடுக்கின்றன.

## இந்திய கப்பற்படையின் உதவி.

"இந்த வேலையிலெல்லாம், இந்திய கப்பற்படை, ஏகாதிபத்திய நாட்டுக் கப்பற்படைகள், நேசதேசத்தாரின் கப்பற்படைகள்—இவைகளெல்லாம் பிரிட்டிஷ் கப்பற்படைக்கு உதவிசெய்து வருகின்றன. நெதர்லாந்து கப்பற்படை, கிழக்கிந்தியத் தீவுகளுக்கு அருகில் உள்ள கடலில் சிறந்த வேலை செய்கின்றன.

"எதிரிக் கப்பல்கள்மேல் விடாமல் போர் தொடுத்ததன் பயனாக, 40 லட்சத்து 7 ஆயிரம் டன் எதிரிக் கப்பல்கள் நாசமாக்கப்பட்டன. மற்றவர்களுடைய கப்பல்களில், ஜூன் மாதக் கடைசிவரைக்கும் நஷ்டமானவை 1,736 கப்பல்கள்; அவைகளின் மொத்த எடை 71 லட்சத்து 18 ஆயிரம் டன்கள். நஷ்டமடைந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை பின் வருமாறு :—பிரிட்டிஷ் கப்பல்கள் 1,0[illegible]8 (4,6[illegible]5,132 டன்); நேசதேசக் கப்பல்கள் 334 (1,498,047 டன்); நடுநிலைமை நாட்டுக் கப்பல்கள் 325 (1,014,943 டன்)."

பிரிட்டிஷ் பட்டாளமும் மெச்சத்தகுந்த விதமாக விசாலப்படுத்தப்பட்டு இருக்கிறது. டங்கர்க்கிலிருந்து அதிக சேதமில்லாமல் திரும்பிவந்த பிறகு, மத்திய கிழக்கரங்க சண்டைகளிலும், இதர போர்முனைகளில் நடந்த சண்டைகளிலும், பிரிட்டிஷ் துருப்புகள் தம்முடைய திறமையை காட்டி வெற்றிபெற்றுள்ளன. பிரிட்டன் இப்போது ஒரு யுத்தகோட்டையாக விளங்குகிறது. ஜெர்மானியர்கள் படையெடுத்தால் அவர்களை விரட்டியடிக்கும்படியான பலம் பெற்றிருக்கிறது. இது மாத்திரமல்லாமல், பிரான்சு முதலிய தேசங்களின்மேல் படையெடுத்துச் செல்வதற்கும் தயாராயிருக்கிறது.

பிரிட்டிஷ் யுத்த மந்திரி, காப்டன் மார்ஜீசன், கூறுவதாவது :—"இனிமேல் நடக்கப்போகும் முடிவான சண்டைகளில் போர்புரிவதற்குத் தயாராக பிரிட்டிஷ் பட்டாளம் இருக்கிறது." பிரிட்டிஷ் பட்டாளங்களின் பிரதம தளகர்த்தரான ஜெனரல் சர் ஜான்டில் கூறுவதாவது :—"பிரிட்டிஷ் பட்டாளம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குகிறது." இந்த நம்பிக்கைக்குச் சில காரணங்கள் உண்டு. மத்திய கிழக்கு அரங்கத்தில் பிரிட்டனின் நிலைமை அதிகமான பலம் பெற்று இருக்கிறது. தெற்கு ஆப்பிரிக்காவுக்கும், கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும் தரை வழியாகவும், கடல் வழியாகவும், இத்தாலியால் வரும் தீங்கு நீக்கப்பட்டது. செங்கடலில்

யாதொரு பயமுமில்லாமல் இப்போது கப்பல்கள் போகலாம்.

கிழக்கில், அச்சு நாடுகளுக்கு எதிராக சிரியாவின் கதவுகள் சாத்தப்பட்டன. நேச தேசத்தார்களுடைய நிலைமை பலப்படுத்தப்பட்டது. இராக் கலகத்தின் முடிவும், இரானில் பெற்ற வெற்றியும், மத்திய கிழக்கு அரங்கத்தை, ரஷ்யாவுடனும் இந்திய ராணுவத் தலைமைக் காரியாலயத்தோடும் ஒன்று சேர்த்து விட்டது.

### பிரிட்டனின் விமான பலம்.

கடைசியாக, எல்லாவற்றையும்விட மிகப் பெருமை வாய்ந்த காரியங்களைச் சாதித்தது பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை. பிரிட்டனுக்கு எதிராக ஜெர்மனி நடத்திய விமானப் போராட்டத்தில், பிரிட்டிஷ் விமானங்கள், ஜெர்மன் விமானங்களை விரட்டியடித்தன. அதுமாத்திரமல்லாமல் இப்போது ஜெர்மனியின்மேல் பலமான வெடிகுண்டு தாக்குதல்களைச் செய்து வருகின்றன. ஜெர்மனியின் தொழிற்சாலைகளும், ராணுவச்சாலைகளும் அடிக்கடி தாக்கப்படுகின்றன. இதை பற்றி, பிரிட்டிஷ் விமானமந்திரி, சர் ஆர்ச்சிபால்ட் சிங்கிளேர் கூறுவதாவது :—'' ஜெர்மனியைத் தோற்கடிக்க முடியாது என்ற எண்ணம் உடைக்கப்பட்டது.''

இந்த இரண்டு வருஷ யுத்தத்தில் 4,500 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. பிரிட்டன் 1,400 விமானங்களை இழந்திருக்கிறது. ஆனால் 450 விமானங்களிலிருந்த விமான ஓட்டிகள் உயிர் தப்பினார்கள்.

பிரிட்டிஷ்—ஜெர்மன் விமான யுத்தத்தில், பிரிட்டன் தான் இப்போது முன்னேறிச் சென்று போரிடுகிறது. ரஷ்ய யுத்தமும், அதில் பிரிட்டிஷ் விமான உற்பத்தியும், பிரிட்டிஷ் விமானப்படைக்கு இப்போது பெருதவி செய்கின்றன. பிரிட்டனில் நடந்த விமானப்போரில், பாதுகாப்பதில், பிரிட்டிஷ் விமானப்படை தன்னுடைய திறமையைக் காட்டியிருக்கிறது. ஜெர்மனி 2,375 விமானங்களை பிரிட்டிஷ் விமானப்போரில் இழந்து விட்டது. 375 பிரிட்டிஷ் விமான ஓட்டிகள் இந்தப் போரில் இறந்து போனார்கள். ஜெர்மனியின்மேல் நடக்கும் விமானப்போரில், பிரிட்டிஷ் விமானப்படை முடிவான வெற்றிக்கு வழி ஏற்படுத்திக்கொண்டு வருகிறது.

சென்ற வருஷ விமான நஷ்டமும், இந்த வருஷ விமான நஷ்டமும் கீழேதரப்படுகின்றன :—

| | | |
|---|---|---|
| 1941 : | பிரிட்டிஷ் விமானங்கள் | 513. |
| ,, | ஜெர்மன் விமானங்கள் | 420. |
| 1940 : | பிரிட்டிஷ் விமானங்கள் | 347. |
| ,, | ஜெர்மன் விமானங்கள் | 1,338. |

புதிதாகச் செய்யப்பட்ட பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களைவிட சிறந்தவை என்று சொல்லப்படுகிறது. ஜெர்மனி பிரிட்டிஷ் விமானப் படைக்குப் பயப்படும் நிலையில் இருக்கிறது.

---

# ரஷ்யர்கள் திருப்பித் தாக்குகிறார்கள்.

## மத்தியப்பகுதியில் அழிக்கப்பட்ட ஜெர்மன் பட்டாளங்கள்.

### ரஷ்யாவுக்கு அனுகூலமான விஷயங்கள்.

ரஷ்ய யுத்தத்தில், ஜெர்மானியர்கள் இன்னும் முக்கியமான இடங்களில் ஒன்றைக்கூட பிடிக்க முடியவில்லை. லெனின்கிராட், மாஸ்கோ, கீய்வ், ஒடெஸ்ஸா என்ற நான்கு ஜெர்மன் லட்சியங்களும் ஜெர்மானியர்கள் கையில்படாமல் நழுவிக்கொண்டே இருக்கின்றன. லெனின்கிராட் அபாயமான நிலைமையில் இருக்கிறதென்பதை மறுக்க முடியாது. ஆனால் மார்ஷல் வாரஷீலோவ் அவர்களின் தலைமையின் கீழ், ரஷ்யர்கள் மிகக்கடுமையாக ஜெர்மானியர்களை தாக்கி விரட்டிக்கொண்டிருக்கிறார்கள். லெனின்கிராடைச்சுற்றி வளைத்துக்கொண்டதாக ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள் ; ஆனால் பல இடங்களில் இழந்துபோன பிரதேசங்களை ரஷ்யர்கள் மறுபடியும் கைப்பற்றிக்கொண்டார்கள். மாஸ்கோவுக்கும், இதர முக்கிய ஸ்தானங்களுக்கும், லெனின்கிராட் முழு ரயில்வே தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது.

லெனின்கிராடுக்குக் கிழக்கே 25 மைல் தூரத்திலுள்ள ஷ்லூசல்பர்க்கை ஜெர்மானியர்கள் பிடித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஒனெகா ஏரிக்கும், லடோகா ஏரிக்கும் மத்தியில் உள்ள சுவீர் ஆற்றுக்கருகில் பின்லாந்து துருப்புகள் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த முன்னேற்றம் சற்று கவலைக்கிடமானதாயிருந்தாலும், ரஷ்யர்கள் '' லெனினுடைய நகரத்''தைப் பாதுகாக்க சகலவித ஏற்பாடுகளும் செய்திருப்பதாகத் தெரிகிறது.

மத்தியப் பகுதியில், ரஷ்யர்கள் கடுமையாக எதிர்த்துத் தாக்குகிறார்கள். ஸ்மோலென்ஸ்கிலிருந்து, பிரிபெட் சதுப்பு நிலங்கள் வரைக்கும் ஒரு நீண்ட போர்முனையைப் பாதுகாத்துவரும் மார்ஷல் வான் ப்ளாக்கின் ஜெர்மன் துருப்புகளை ரஷ்யர்கள் எதிர்த்துப் போரிடுகிறார்கள். ஜெர்மன் போர் முனையை ரஷ்யர்கள் குறடாவைப்போல பிளந்திருக்கிறார்கள். இதனால் ஜெர்மானியர்கள் மாஸ்கோவுக்குச் செல்ல நினைத்த முயற்சி உறுதியாகத் தடுக்கப்பட்டது. ஸ்மோலென்ஸுக்கு அருகில் உள்ள எல்னு பட்டணம் ரஷ்யர்களால் திரும்பிப் பிடிக்கப்பட்டது. மத்திய பகுதியில், ரஷ்யர்கள் 50 கிராமங்களை ஜெர்மானியர்களிடமிருந்து கைப்பற்றிக்கொண்டார்கள். ரஷ்ய ' காசக் ' சிப்பாய்கள் ஆச்சரியப்படும்படியான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். மத்தியப் பகுதியில் போர்புரிந்த பத்து ஜெர்மன் பட்டாளங்களை அடியோடு அழித்துவிட்டார்கள் ; ஒரு ஜெர்மன் தளகர்த்தர் கொல்லப்பட்டார்.

### கலைக்கப்பட்ட ஏற்பாடு.

மத்தியப் பகுதியில் ரஷ்யர்கள் அடைந்த வெற்றி, ஜெர்மன் தளகர்த்தர் வான் ப்ளாக்கின் ஏற்பாட்டைக் கலைத்திருக்கிறது. கோமல் என்ற இடத்திலிருந்து கார் கோவ் வழியாகச் சென்று, ட்னீபர் நதிக்கரையின் கீழ்ப்பாகத்திலிருக்கும் ரஷ்ய தளகர்த்தரான மார்ஷல் பூடென்னியின் துருப்புகளைத் தாக்கவேண்டும் என்பது வான் ப்ளாக்கின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு இடமில்லாமல் ரஷ்யர்கள் யுத்த நிலைமையை மாற்றியிருக்கிறார்கள். ட்னீபர் நதியைக் கடப்பதற்காக பாலங்கள் போடுவதற்கு ஜெர்மானியர்கள் முயற்சி செய்கிறார்கள். அந்த முயற்சிகளை ரஷ்ய விமான ஓட்டிகளும், ரஷ்யத் துப்பாக்கி வீரர்களும் கெடுத்துக்கொண்டு வருகிறார்கள். தெற்குக் கோடியில், ஒடெஸ்ஸா எதிரிகளை எதிர்த்து நிற்கிறது. அதனுடைய பலமான பாதுகாப்புகள் ருமேனியர்களை அப்படியே நிற்கும்படி செய்துவிட்டது.

கிழக்குப் போர்முனையில் யுத்தம் தொடங்கி 12 வாரம் ஆகப்போகிறது. ரஷ்யர்கள் தங்களுடைய நாட்டைத் தைரியமாகக் காத்துவருகிறார்கள். இதல்லாமல், நாட்டுக்கு வெளியில் தங்களுடைய திறமையைக் காட்டிவருகிறார்கள். சென்ற வாரத்தில், ஜெர்மனியின் தலைநகரமான பர்லினை, ரஷ்ய விமானப் படை இரண்டுதடவை பலமாகத் தாக்கியிருக்கிறது. பால்டிக் கடலில் ரஷ்ய கடற்படை எதிரிக் கப்பல்களை நாசம் செய்துகொண்டு வருகிறது.

ரஷ்யா உற்சாகப்படும்படியான பலகாரியங்கள் நடக்கின்றன. பிரிட்டனுடைய யுத்த சாமான் ' சப்ளை'கள் ஏராளமாக ரஷ்யாவுக்கு வந்துகொண்டே இருக்கின்றன. அமெரிக்கக் கப்பல்கள் பெட்ரோல் முதலிய எண்ணெய்களைக்கொண்டு வ்லாடி வாஸ்டக்குக்குப் பத்திரமாய்ப் போய்ச்சேர்ந்தன. மூர்மான் சிக்குக்கு அப்பால் ஆர்டிக் பிரதேசங்களில் பிரிட்டிஷ் கப்பற்படை வேலைசெய்து வருகிறது ; ஒரு ஜெர்மன் நாசகாரிக் கப்பலையும், இரண்டு இதர கப்பல்களையும் பிரிட்டிஷ் கப்பல்கள் சமீபத்தில்தான் முழுகடித்திருக்கின்றன. நேசதேசத்தார்கள் வடக்கே ஆர்டிக் கடலிலுள்ள ஸ்பிட்ஸ்ஜன் தீவைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இதனால் ஆர்டிக் ' சப்ளை ' வழி பாதுகாக்கப்பட்டிருக்கிறது ; ஜெர்மனியின் நிலக்கரி ' சப்ளை ' நிறுத்தப்பட்டது. இதல்லாமல், அடிக்கடி பிரிட்டிஷ் ஆகாய விமான படை ஜெர்மனியின் முக்கிய லட்சியங்களை அழித்துக்கொண்டே வருகிறது. இவைகளெல்லாம், ரஷ்யாவுக்கு அனுகூலமான காரியங்கள்.

பர்மா விமானப்படையைச் சேர்ந்த விமான ஓட்டிகளைக் கீழே படத்தில் காணலாம்.



பிரிட்டிஷ் ராயல் விமானப்படையின் என்ஜினீர் ஆபிஸராக முதன் முதலாக சேர்க்கப்பட்ட பர்மியர், பர்மா விமானப்படையில் தற்போது வேலை செய்து வருகிறார். பர்மா விமானப்படையானது, பர்மா நன்கொடையாகக் கொடுத்த 150,000 பவுன்களைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது. இப்படையைச்சேர்ந்த 'ஹரிகேன்' விமானங்கள் 30 விரோதி விமானங்களுக்குமேல் சுட்டுத்தள்ளின. மேலும் இந்தப் பர்மாப்படை இங்கிலாந்தின்மீது பறந்துவந்த முதல் இத்தாலிய விமானத்தைச் சுட்டுத்தள்ளியது.

---

# அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடுமா?

## ஜெர்மனியின் வீண் வம்புச் செய்கைகள்.

### "கிரீயர்", "ஸ்டீல் சீபேரர்", "செஸ்ஸா", சம்பவங்கள்.

"கிரீயர்" என்ற ஒரு அமெரிக்க நாசகாரிக் கப்பல் தபால்களை எடுத்துக்கொண்டு வடக்கேயுள்ள ஐஸ்லாந்துக்குப் போய்க்கொண்டிருந்தது. அதை ஒரு ஜெர்மன் 'சப்மரீன்' (நீர் முழுகிக் கப்பல்) பட்டப்பகலில், வெளிச்சம் நன்றாக இருக்கும்போது, தாக்கிற்று. இது கடந்த வியாழக்கிழமை (1941-ம் ஞு செப்டெம்பர்மீ 4உ) நடந்த சம்பவம். இது அதி முக்கியமான ஒரு சம்பவமாக மாறிவிடும்போலிருக்கிறது.

"கிரீயர்" கப்பலில் 122 உத்தியோகஸ்தர்களும், இதர ஆட்களும் இருந்தார்கள்; 1,090 டன் சாமான் இருந்தது. அமெரிக்கக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு, கப்பலின் நம்பர் நன்றாகத் தெரியும்படி, "கிரீயர்" கப்பல் போய்க்கொண்டிருந்தது என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சொல்லுகிறார். அந்தக் கப்பலை ஜெர்மன் சப்மரீன் கப்பல் நீர் வெடிகுண்டுகளால் தாக்கியது. ஆனால் குறி தவறிவிட்டது. "கிரீயர்" கப்பல் உடனே சப்மரீனைத் தாக்கியது. அதனுடைய குறி தவறவில்லை. சப்மரீன் வெடிகுண்டினால் தாக்கப்பட்டது.

இந்த சம்பவத்தைப்பற்றி, ஜெர்மனி வேறுவிதமாகக் கூறுகிறது. முதலில் "கிரீயர்" கப்பல்தான் ஜெர்மன் சப்மரீனைத் தாக்கியதென்றும், தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, சப்மரீன் நீர் வெடிகுண்டுகளால் சுட்டதென்றும் ஜெர்மனி கூறுகிறது. வேண்டுமென்றே ஜெர்மன் சப்மரீனைத் தாக்கும்படி பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் உத்தரவிட்டாரென்றும், அவருடைய நோக்கம் அமெரிக்க நாட்டு மக்களை ஜெர்மனிக்கு விரோதமாகத் தூண்டி, அமெரிக்காவை யுத்தத்தில் இழுத்துவிடவேண்டும் என்பதுதான் என்று ஜெர்மனி அதற்கு ஒரு காரணம் காட்டியிருக்கிறது.

ஜெர்மனி கூறியதை முழுதும் மறுத்து அமெரிக்க கப்பற்படை இலாகா ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை கூறுவதாவது:—முதல் முதலில் ஜெர்மன் சப்மரீன்தான் "கிரீயர்" கப்பலைத் தாக்கிற்று. அதற்குப் பிறகு தான் "கிரீயர்", சப்மரீனை தாக்கியது.

இந்த சந்தர்ப்பத்தில், 1941-ம் ஞு ஜூன்மீ 10உ நடந்த ஒரு சம்பவத்தை நினைவூட்டலாம். அப்போது "ராபின் மூர்" என்ற அமெரிக்கக் கப்பல் ஒரு ஜெர்மன் சப்மரீனால் தாக்கப்பட்டது. அப்போது அமெரிக்காவில் ஜெர்மனிக்கு விரோதமாக உணர்ச்சி உண்டாயிருந்தது.

#### பத்திரிகைகளின் கருத்து.

"கிரீயரை"த்தாக்கிய சப்மரீன் அகப்பட்டால், அது உடனே விலக்கப்படும் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். இந்த சம்பவம் அமெரிக்காவை யுத்தத்தில் ஈடுபடும்படி செய்யவேண்டுமா, அல்லவா, என்ற விஷயத்தை அமெரிக்காதான் முடிவு செய்யவேண்டும் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் அபிப்பிராயப்படுகின்றன. அமெரிக்கப் பத்திரிகைகள், இந்த சம்பவம் அமெரிக்காவின் உணர்ச்சியைத் தூண்டக்கூடியதாயிருக்கிறதென்று கூறுகின்றன. நேர்முகமாக அமெரிக்கா ஏதாவது செய்ய விரும்பினால், தன்னுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும், கடல் சுதந்தரக் கொள்கையை நிலைநிறுத்துவதற்காகவுமாய் இருக்குமே ஒழிய, பிரிட்டனுக்காக யுத்தத்தில் கலப்பதாய் இருக்காது என்று சொல்லப்படுகிறது.

இந்த சம்பவம் வெளியான உடனே, செங்கடலில் வேறொரு சம்பவம் நடந்ததாகத் தெரிகிறது. "ஸ்டீல் சீபரர்" என்ற அமெரிக்க சாமான் கப்பல் ஒரு விமான வெடிகுண்டினால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது. அதிகதூரம் செல்லும் ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் சூயஸ் கால்வாய்க்குத் தெற்கில் வெகுதூரம் பறந்துகொண்டிருந்ததாகத் தெரிகிறது. அவைகள் டோடெகனீஸ் தீவுகளிலுள்ள விமானத் தளங்களிலிருந்து வந்திருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. முழுகடிக்கப்பட்ட கப்பலில் வேலை செய்திருந்த 24 பேர் ஒரு எகிப்திய துறைமுகத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். தாக்கப்பட்ட 20 நிமிஷங்களில் கப்பல் முழுகிவிட்டதென்றும், அதன் பின் 12 மணி நேரம் படகில்

சென்று ஒரு தீவை அடைந்தார்களென்றும், தப்பு விப்பதற்குமுன் அங்கு 24 மணி நேரம் இருந்தார்களென்றும் அவர்கள் கூறினார்கள்.

### கடல் வழி

அமெரிக்காவின் மூன்று கப்பல்களை ஜெர்மனி தாக்கி முழுகடித்ததால், அமெரிக்காவின் கொள்கை சற்று மாறலாம் என்று தெரிகிறது. பிரசிடெண்ட் ரூஸ் வல்ட், தான் செய்யப் போகும் பிரசங்கத்தில் இதைப்பற்றிக் குறிப்பிடுவார் என்று சொல்லப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து, ஐஸ்லாந்து வரைக்கும் உள்ள கடல் வழிக்குள் எந்த எதிரிக் கப்பலும் வரக்கூடாதென்றும், அப்படித் தவறி வந்தால் அவைகள் அழிக்கப்படுமென்றும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறலாமென்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கியதால், அமெரிக்காவுக்கு எதிராக ஜெர்மனி ராணுவ முயற்சி செய்ததாக ஏன் கருதக்கூடாது என்ற அபிப்பிராயம் பலப்பட்டுவருகிறது.

இந்த சம்பவங்கள் அகில தேசீய நிலைமையை எந்தவிதமாகப் பாதிக்கும் என்பது பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் செய்யப்போகும் பிரசங்கத்தினாலும், அதற்குப்பின் நடக்குப்போகும் செய்கைகளாலும், தெரியவரும்.

பனமா கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு சென்ற ஒரு அமெரிக்கக் கப்பல், ஜெர்மன் சப்மரீனால் தாக்கப்பட்டு, ஐஸ்லாந்துக்கு அருகில் முழுகடிக்கப்பட்டது. இதற்குமுன் இது "செஸ்ஸா" என்ற டேனிஷ் கப்பலாயிருந்தது. அந்த கப்பலை டேனிஷ் அரசாங்கத்தாரிடமிருந்து அமெரிக்கா சுவாதீனப்படுத்திக் கொண்டது. உணவுப் பொருள்கள், மரசாமான்கள் முதலியவைகள்தான் கப்பலில் இருந்தனவே ஒழிய யுத்த ஆயுதங்கள், வெடிகுண்டு சாமான்கள் முதலியன கிடையவே கிடையாது கப்பலில் கொண்டு போன சாமான்கள் ஐஸ்லாந்துக்குச் சொந்தமானவை ; கப்பல் அமெரிக்காவுக்குச் சொந்தமானது.

---

# வாரச் செய்திக் குறிப்புகள்:

### ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப்போர்.

சென்ற வாரம் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை அருமையான வேலை செய்திருக்கிறது ; ஜெர்மனியின் தலைநகரமாகிய பர்லினைப் பலமாகத் தாக்கி ஏராளமான சேதத்தை உண்டாக்கியிருக்கிறது. நூற்றுக் கணக்கான பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்கள் ஞாயிற்றுக்கிழமைதினம் பர்லின்மேல் வெடிகுண்டுமாரி பொழிந்தன. இதற்கு முன் பர்லின் மேல் அவ்வளவு அதிகமாக வெடி குண்டுகள் போடப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

இந்த விமான எதிர்ப்புக்கு ஐந்து நாட்களுக்கு முன் பிரிட்டிஷ் விமானங்கள் பர்லினைத் தாக்கியிருந்தன. அந்தத் தாக்குதல் பலமான தாக்குதல் என்று ஜெர்மனியர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை விட அதிக பலமான தாக்குதல் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இது வரைக்கும் உபயோகித்ததை விட அதிகமான விமானங்களும், வெடி குண்டுகளும் உபயோகிக்கப்பட்டன.

பிரிட்டிஷ் விமானப் படையின் தாக்குதலால் அதிக சேதம் விளைவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்கள் ஜெர்மனியின் தலை நகரமாகிய பர்லினைத் தாக்கியதில் இது 51-வது தடவையாகும். இதைக் குறித்து, பிரிட்டிஷ் விமான மந்திரி சபை ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை கூறுவதாவது :—

"நேற்று இராத்திரி (ஞாயிற்றுக்கிழமை) பிரிட்டிஷ் விமானப் படை, ஜெர்மனியின் முக்கிய லட்சியங்களாகிய பர்லின், கீல் முதலிய இடங்களையும், பலோனையும், தாக்கிற்று நல்ல நிலா வெளிச்சத்தில், பலம் பொருந்திய பிரிட்டிஷ் படையால் இத் தாக்குதல் இரண்டு மணி நேரம் நடத்தப்பட்டது. அநேக வெடி குண்டுகளும், அக்கினிக் குண்டுகளும் போடப்பட்டன. நகரத்தின் பல பாகங்களில் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது. ஏராளமான கட்டடங்களும், சாமான்களும் நாசமாக்கப்பட்டன.

"கீல் பட்டணத்திலுள்ள கப்பல் கட்டும் சாலைகளும், பலோனில் உள்ள துறைமுகமும் பலமாகத் தாக்கப்பட்டன. நான்கு எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டிஷ் விமானங்களில் 20 இழக்கப்பட்டன.

"ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள பல ஆகாய விமானச் சாலைகளை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின.

பர்லினைத் தாக்கியதைப் பற்றி ஒரு ருசிகரமான விஷயம் கூறப்படுகிறது. அதே நாளில் ஒரு வருஷத்துக்கு முன் ஜெர்மன் வெடி குண்டு விமானங்கள் லண்டனை முதல் முதலாகத் தாக்கின. பர்லினை இவ்வளவு பலமாகத் தாக்கியது, ரஷ்யாவுக்கு பூரண உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினால்தான். இரண்டு போர் முனைகளில் ஜெர்மனியை கடுமையான யுத்தம் செய்யும்படி கட்டாயப் படுத்தினால், ஜெர்மனிக்கு அது பெரிய பிரதிகூலம். இதனால் ரஷ்யாவின் மேல் நடக்கும் யுத்தத்தின் வேகம் கொஞ்சம் குறையும்.

### ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில் நடந்த பெரிய விமானச்சண்டையில் ஜெர்மனி தோற்றுவிட்டது என்று "ரெட் ஸ்டார்" (சிகப்பு நக்ஷத்திரம்) என்ற பத்திரிகையில் மேஜர்—ஜெனரல் கிரெண்டால் கூறுகிறார். இரண்டு மாதமாக நடந்த சண்டையில், 7,200 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. இந்த விமானங்களுக்குப் பதிலாக வேறு 7,200 விமானங்கள் செய்து ரஷ்ய யுத்தத்துக்கு அனுப்புவது ஜெர்மனியால் முடியாத காரியம் என்று அவர் தெரிவிக்கிறார். அவர் ரஷ்ய—ஜெர்மன் விமானப்போரைப்பற்றிக் கூறும் விவரங்களில் முக்கியமானவை பின்வருமாறு :—

ஜெர்மனி நான்கு பெரிய விமானப் பட்டாளங்களையும், ஒரு சிறு விமானப்படையையும் ரஷ்ய யுத்தத்துக்கு அனுப்பிற்று ஆகாயத்தில், ரஷ்யாவைவிட அதிக பலம் தனக்கு இருக்கிறதென்று ஜெர்மனி காட்ட முயற்சி செய்தது. ஆனால் அந்த முயற்சி கைகூடவில்லை. இரண்டு மாத யுத்தங்களுக்குப் பிறகு ரஷ்ய விமானங்கள்தான் ஜெர்மானிய விமானங்களைவிட போர் புரிவதில் உயர்ந்தவை என்று ருசுப்படுத்தப்பட்டது. இந்த விஷயத்தை ஜெர்மானியர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக ரஷ்ய விமானங்கள் உயர்ந்தவை என்றும், சிறப்பாக 'பைடர்' என்ற புதிய ரஷ்யப்போர் விமானங்கள் சிறந்தவை என்றும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

முதல் இரண்டு மாதங்களில், ரஷ்யாவில், ஜெர்மனி 7,200 விமானங்களை இழந்துவிட்டது என்று சொன்னேனல்லவா ? இதுவரைக்கும் ஜெர்மன் விமானப்படையின் சரித்திரத்தில் இம்மாதிரியான சம்பவம் நடந்தது கிடையாது. பொதுவாக விமான சரித்திரத்திலேயே, இதுவரையில் இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டதே இல்லை. தரையில் இருக்கும்போதே 2,000 ஜெர்மானிய விமானங்கள் ரஷ்யர்களால் நாசமாக்கப்பட்டன.

ரஷ்யாவைத் தாக்குவதற்குமுன் ஜெர்மனி அடைந்த விமான நஷ்டங்கள் பின்வருமாறு :—

1939-ம் ஆண்டு 300 விமானங்கள்.

1940-ம் ஆண்டு 6,800 விமானங்கள்.

1941-ம் ஆண்டு, முதல் 5 மாதங்களுக்குள் 1,350திலிருந்து 1,700க்குள்.

கைதிகளாகப் பிடிக்கப்பட்ட சில ஜெர்மன் விமான ஓட்டிகள், புதிதாகச் செய்யப்பட்ட ரஷ்ய போர் விமானங்களின் திறமையைப்பற்றி, தங்களுடைய மதிப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பேரண்ட்ஸ் கடலிலிருந்து, கருங்கடல் வரைக்கும் இப்போதிருக்கும் நிலைமை இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு, மாறுதல் இல்லாமல், இருக்குமானால் ஜெர்மன் விமான நஷ்டங்கள் ரொம்பவும் அதிகப்படும். ஜெர்மன் விமானப்படையில் இப்போது வேலை செய்பவர்கள் அவசரமாகத் தயார் செய்யப்பட்ட விமான ஓட்டிகள். இப்போதிருக்கும் ஜெர்மன் விமான ஓட்டிகள் 1940-ம் வருஷ பிற்பாதியிலாவது அல்லது 1941-ம் வருஷம் முதல் பாதியிலாவது, ஜெர்மன் விமானப்படையில் சேர்ந்தார்கள் என்று கைதிகளாகப்பிடிக்கப்பட்ட ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். இந்த விதமாக, அதிகப்பயிற்சி இல்லாத ஜெர்மன் விமான ஓட்டிகளை வைத்துக்கொண்டு போர் புரிவதால், ஜெர்மனிக்கு இன்னும் அதிகமான விமான நஷ்டங்கள் கட்டாயம் ஏற்படும்.

இதல்லாமல், இழந்த விமானங்களுக்குப்பதிலாக, புதிய விமானங்களை விரைவாகச்செய்து யுத்த முனைக்கு அனுப்புதவற்கு, ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கு முடியவில்லை. ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த பிறகும், ரஷ்ய யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பும், ஜெர்மனி சுமார் 9,000 ஆகாய விமானங்களை இழந்திருக்கிறது. இந்த நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்கு ஜெர்மானியர்கள் அதிகமான முயற்சி செய்யவேண்டியிருந்தது ; தங்களுடைய விமானங்கள் பறந்து போர் புரியும் தூரத்தைக் குறைக்கவேண்டி வந்தது.

ஜெர்மனியினுடைய ஆகாய விமானங்கள் செய்யும் தொழிற்சாலைகள், எவ்வளவு மும்முரமாக வேலை செய்ய வேண்டுமோ, அவ்வளவு மும்முரமாக வேலை செய்கின்றன. அப்படிச்செய்தபோதிலும், அதிகரித்துக்கொண்டுவரும் ஜெர்மன் விமான நஷ்டங்களை, அவைகளால் சரிப்படுத்தமுடியவில்லை. ஆனால் ரஷ்ய விமான பலமோ, நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

மேலே குறித்த விவரங்கள், ரஷ்யாவின் முதல் விமானப்படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கிரெண்டால் அவர்களால் "ரெட் ஸ்டார்" என்ற ரஷ்யப் பத்திரிகைக்கு எழுதப்பட்ட கட்டுரையில் காணப்படுகின்றன.

ரஷ்ய யுத்தத்தின் போக்கைப்பற்றியும், ரஷ்யாவுக்குப் பூரண உதவி விரைவில் அளிக்கவேண்டும் என்பதின் அவசியத்தைப்பற்றியும், லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை ஒரு தலையங்கத்தில் விளக்கிக் கூறி யிருக்கிறது. அப்பத்திரிகை கூறுவதன் சாரமாவது :—

ரஷ்யாவில் நடக்கும் யுத்தத்தின் போக்கைக் கவனித்தால் சில விஷயங்கள் நன்றாகத் தெரிய வருகின்றன. ரஷ்யாவினுடைய மோட்டார் படைகளும், விமானப் படைகளும் மிகத்திறமையாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மெச்சத்தகுந்த விதமாக இந்த யுத்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. ரஷ்யாவுக்கு இன்னும் அநேக கஷ்டமான நிலைமைகள் ஏற்பட்டாலும் ஏற்படலாம் ; ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் எவராலும் மறுக்க முடியாது. அதாவது, ஜெர்மானியர்களுடைய முழு யுத்த யந்திர பலத்துக்கு எதிரிடையாக நின்று, போர் புரியும் திறமையைக்காட்டி, இவ்வளவு காலம் போர்புரிந்து வந்த நாடு ரஷ்யா ஒன்றுதான். ரஷ்யா இப்போது ஒரு பெரிய பளுவைத் தாங்கிக்கொண்டிருக்கிறது. பிரிட்டனுக்காகவும், நேசதேசத்தார்களுக்காகவும், தனக்காகவும், அந்தப் பளுவைத் தாங்கிக்கொண்டு பெரிய பாதுகாப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறது. மகத்தான விஷயங்கள் இந்தப் போராட்டத்தைப் பொறுத்திருக்கின்றன. ஆகையால், பிரிட்டனும், அமெரிக்காவும், ரஷ்யாவுக்கு எவ்வளவு யுத்த சாமான்கள் முதலிய உதவி கொடுக்க முடியுமோ, அவ்வளவு உதவியும் கொடுத்தாகவேண்டும். பிரிட்டிஷ் மக்கள் ரஷ்யாவுக்குப் பூரண ஆதரவு கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் அவர்களுடைய விருப்பத்தை அதிக விரைவாக நிறைவேற்றுவது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் கடமை.

ரஷ்ய யுத்தத்தின் முக்கியத்தை பிரிட்டன் உணர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டு, மேலும், "டைம்ஸ்" பத்திரிகை எழுதுவதாவது :—பிரிட்டனிலிருந்து மாஸ்கோவுக்கு (ரஷ்யாவின் தலைநகரத்துக்கு) ஒரு தூ கோஷ்டி செல்லப்போகிறது. அதன் முக்கியத்தை அறிந்துதான், அதற்குத் தலைவராக லார்டு பீவர் புரூக் என்ற பிரிட்டிஷ் மந்திரியை, பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்திருக்கிறது. லார்டு பீவர் புரூக் செய்யவேண்டிய காரியங்களை மிக விரைவாகச் செய்யும் சாமர்த்தியம் பெற்றவர்.

சென்றவாரம், எடின்பரோவில் (பிரிட்டன்) பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரியான சர் கிங்ஸ்லி வுட் பேசியபோது, ரஷ்யாவுக்குச் செய்யும் உதவியைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதன் சுருக்கமாவது :—ரஷ்யாவுக்கு எல்லாவித பொருளாதார உதவியும் கொடுக்கப்படும். தங்களுக்கு இனாமாகப் பொருளுதவி வேண்டாமென்றும், கொடுக்கும் உதவியைக் கடனாகக் கொடுத்தால் போதுமென்றும், ரஷ்யர்கள் கூறினார்கள். அதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்துக்கொண்டது. பிரிட்டன் கடனாகக் கொடுக்கும் பொருளுதவிக்கு அளவு வைக்கப்படவே இல்லை.

பின்லாந்து தன்னுடைய எல்லைகளைத் தாண்டி ரஷ்யாவுக்கு எதிராகச் சண்டை செய்ய விரும்பவில்லை என்று இரண்டு பின்லாந்து பத்திரிகைகள் கூறுகின்றன. "சுவோமென் சோசியால்டி மோக்ராட்டி" என்ற பத்திரிகை எழுதுவதாவது :—

"முதலிலிருந்து, பின்லாந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எண்ணிப் போர் புரிந்து வருகிறது. ரஷ்யப்பட்டாளம் தோல்வியடையாமல் ரஷ்யாவுக்குள் பின்வாங்ச் செல்லுமானால், பின்லாந்தின் சிறிய பட்டாளம ரஷ்யாவுக்குள் சென்று போர் புரிய முடியாது என்ற விஷயம் சாதாரணமாகப் புலப்படும். அப்படி போர்புரிவது மற்றவர்களுடைய வேலையே ஒழிய, பின்லாந்தின் வேலையல்ல. இப்போது கத்திக்குப் பதிலாக கலப்பையை எடுக்கும் காலம் உடனே வராவிட்டாலும், இரண்டு வருஷ யுத்தத்தால் ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு நாட்டுமக்கள் நிர்மாண வேலையில் ஈடுபடவேண்டிய காலம் வந்துவிட்டது."

மற்றொரு பின்லாந்து பத்திரிகை கூறுவதாவது :—"வருங்காலப் பாதுகாப்புக்குச் செய்ய வேண்டிய வேலையை செய்துமுடிக்கும் நிலைமையில், பின்லாந்தின் ராணுவ பலம் இப்போது இருக்கிறது. பாதுகாப்புக்கு எந்தக் காரியங்களை இன்னும் செய்யவேண்டும் என்பது அதன் அவசியத்தைப் பொறுத்திருக்கிறது. ஆனால் இதன் முடிவு ராணுவ உத்தியோகஸ்தர்களைப் பொறுத்திருக்கிறது. அவர்கள் ஒரு விஷயத்தை நன்றாக அறிந்திருக்கிறார்கள் ; பின்லாந்து நாட்டு மக்கள் புதிய பிரதேசங்களைக் கைப்பற்ற விரும்பவில்லை, சமாதானம் நிலைத்திருப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள்."

பின்லாந்தில் இந்த இரண்டு பத்திரிகைகள் கூறுவதிலிருந்து, ரஷ்யாவுக்கு எதிராக இனிமேல் யுத்தம் நடத்த பின்லாந்து மக்கள் விரும்பவில்லை என்று தெரிகிறது.

ஆனால், ஜெர்மனி இந்த அபிப்பிராயத்தை விரும்பவில்லை. தனியாக பின்லாந்து ரஷ்யாவுடன் சமாதானம் செய்துகொள்ளும் எண்ணத்தை, ஜெர்மனி கண்டிக்கிறது. லெனின்கிராட் முதலிய இடங்களைத் தாக்கும்போது, பின்லாந்து உதவி செய்யவேண்டியதில்லை என்றும், ஆனால் மூர்மான் சிக்கைக் கைப்பற்றும் வேலையை பின்லாந்து செய்யவேண்டுமென்று ஜெர்மனி விரும்புகிறது. இந்த விஷயத்தை, ஸ்டாக்ஹோமிலுள்ள "திட் நிங்கன்" பத்திரிகைக்கு அதன் பெர்லின் (ஜெர்மனியின் தலை நகரம்) நிருபர் எழுதியிருக்கிறார்.

ஸ்மோலென்ஸ்க் என்ற முக்கியமான இடத்தை ரஷ்யர்கள் கைப்பற்றிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ட்நீபர் நதிக்கரைக்கப்பால் ஜெர்மானியர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுத் துரத்தப்பட்டார்களென்றும், ஜெர்மானியர்களுடைய 238 டாங்கிகள், 50 விமானங்கள், 486 மோட்டார் லாரிகள், இவைகளெல்லாம் ரஷ்யர்களால் நாசமாக்கப்பட்டன வென்றும், 4,000 ஜெர்மானியர்கள் தண்ணீரில் முழுகி இறந்தார்களென்றும் தெரிகிறது.

**ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.**

பாரிசில் (பிரான்சின் தலை நகரம்) பல பாகங்களில் ஜெர்மானியர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சிகளும், கலகங்களும் நடந்து வருகின்றன. சென்ற வாரத்தில் நடந்த சில விஷயங்களைப்பற்றி ஸ்விட்சர்லாந்து (பிரான்சுக்குக் கிழக்கிலும், ஜெர்மனிக்குத் தெற்கிலும் உள்ள நடுநிலைமை நாடு) ரேடியோ கூறுகிறது. ஜெர்மன் படையின் உதவிக்காக, பாரிசில் ஒரு மோட்டார் நிறுத்த வைக்கும் கட்டடம் ஏற்படுத்த செய்யப்பட்டது. அந்தக் கட்டடம் திடீரென்று நெருப்புப்பற்றி எரிய ஆரம்பித்தது. நெருப்பணைக்கும் யந்திரக்காரர்கள் அந்த நெருப்பை அணைத்து விட்டார்கள். அந்த இடத்தை சோதித்துப் பார்த்ததில் வெடிக்காத சில வெடிகுண்டுகள் அகப்பட்டன.

பாரிசில் பிரசித்திபெற்ற கோபுரம் ஒன்று உண்டு. அதற்கு "ஐபீல் டவர்" என்று பெயர். அந்தக் கோபுரத்தில் இருந்த ஒரு ஜெர்மன் சிப்பாயை யாரோ கைத்துப்பாக்கியால் சுட்டார்கள். சிப்பாய்க்குச் சிறிது காயம் ஏற்பட்டது. பூர்ஸ் ஜில்லா பிரதேசத்தில், ஒரு ஜெர்மன் உத்தியோகஸ்தர் பல கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

பிரான்சில் இருக்கும் எல்லா ரஷ்யர்களும் இப்போது கைது செய்யப்படுகிறார்கள். இது ஜெர்மனியின் தூண்டுகோலின்மேல் நடக்கிறது. இதற்கு முன் வெள்ளை ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் கைது செய்யப்படுவதில்லை. ஆனால் இப்போது வெள்ளை ரஷ்யாவைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, சிகப்பு ரஷ்யாவைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, சகல ரஷ்யர்களும் பிடிக்கப்படுகிறார்கள்.

பாரிசில் ஒரு ஜெர்மன் சிப்பாயை யாரோ கொல்ல முயற்சித்தார்களாம். அதற்காக பிணையாக வைக்கப்பட்ட மூன்று பிரெஞ்சுக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

### விஷி.

சிரியாவில் விஷித் துருப்புகளின் பிரதம தளகர்த்தாயிருந்தவர் ஜெனரல் டெண்ட்ஸ் என்பவர். அவர் பிரிட்டிஷாரிடம் கைதியாயிருந்து சமீபத்தில் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு விஷி அரசாங்கம் ஒரு முக்கியமான பதவியைக் கொடுக்கப்போகிறதாகத் தெரிகிறது. அந்தப் பதவி, அட்மிரல் தார்லானுக்கு நெருங்கிய சம்பந்தமுள்ளதாயிருக்குமாம். அட்மிரல் தார்லான் விஷி அரசாங்கத்தின் அயல்நாட்டு மந்திரி ; ஜெர்மனிக்கு ரொம்பவும் வேண்டியவர்.

பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இப்போது இருக்கும் தொடர்புகளைப்பற்றி, புதிய முடிவான தீர்மானங்கள் செப்டம்பர் மாத முடிவுக்குள் செய்யப்படலாம், என்று "லா சுவிஸ்" என்ற ஸ்விட்சர்லாந்து பத்திரிகையின் விஷி நிருபர் தெரிவிக்கிறார்.

### பால்கன்ஸ், துருக்கி, இரான், முதலியன.

இரான் அரசாங்கம், பிரிட்டனும் ரஷ்யாவும் கேட்ட விஷயங்களை ஒப்புக்கொண்டுவிட்டது. இந்த சமாச்சாரத்தை இரானின் முதல் மந்திரி, இரானிய சட்டசபையின் பிரதியேகக் கூட்டத்தில் அறிவித்தார். ஒப்புக்கொண்ட உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்வருமாறு :—

அச்சு நாடுகளின் ஸ்தானீகர் காரியாலயங்கள் இரானில் மூடப்படவேண்டும். இரானிலுள்ள ஜெர்மானியர்களை எல்லாம் பிரிட்டிஷ் துருப்புகளிடத்திலும், ரஷ்யத் துருப்புகளிடத்திலும் ஒப்புவிக்க வேண்டும். உர்மியா ஏரிக்குத் தெற்கில் உள்ள ஒரு இடத்திலிருந்து இரானியத் துருப்புகள் பின்வாங்கிச் செல்லவேண்டும். இரானியத் துருப்புகள் யுத்த ஆயுதங்களையும், தளவாடங்களையும் வைத்திருக்கலாம்.

கடைசியாகக் குறிப்பிட்டிருக்கிற நிபந்தனையைப் பற்றி, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சில கேள்விகள் கேட்கப்பட்டன. இரானியத் துருப்புகள் பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஆயுதங்களை உபயோகப்படுத்தாமலிருப்பதற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று யுத்த மந்திரி, காப்டன் மார்ஜேசன், பதிலளித்தார்.

இரானில் ஒரு ராணுவக் கலகம் நடந்தது என்று ரோம் (இத்தாலியின் தலைநகரம்) ரேடியோ கூறிய பொய்ச் செய்தியை, இரான் ரேடியோ மறுத்திருக்கிறது. இரானிய ஆகாய விமானப்படையைச் சேர்ந்த இரண்டு விமான ஓட்டிகள், இரானின் தலைநகராகிய டெஹரானின் மேல் பறந்தார்கள் ; அவர்கள் யாதொரு சேதமும் செய்வதற்குமுன் விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் விரட்டப்பட்டார்கள். இந்த ஒரு சிறு சம்பவம் தவிர வேறொன்றும் நடைபெறவில்லையென்று, டெஹரான் ரேடியோ கூறுகிறது.

### தூரக்கிழக்கு அரங்கம்.

சீனாவிலுள்ள சில துறைமுகங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும், ஜப்பானியத் துருப்புகள் பின்வாங்கிச் செல்லப்போவதாக சீனப்பத்திரிகைகள் கூறுகின்றன. தெற்குச்சீனா துறைமுகமாகிய பூசௌ, சமீபத்தில் ஜப்பானியர்களால் காலியாக்கப்பட்டது. உடன்படிக்கைத் துறைமுகங்களாகிய மிங்கோவும், சுவாரோவும், நான்சாங் நகரமும் கூடிய சீக்கிரம் காலி செய்யப்படும் என்று தெரிகிறது. ஏன் ஜப்பானியர்கள் இப்படிச் செய்துவருகிறார்கள் ? அதற்கு ஒரு காரணம் உண்டு. சீனாவில் தங்களுக்குள்ள பாதுகாப்பு வரிசையை, ஜப்பானியர்கள் சுருக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். சீனா விரைவில் ஜப்பானைத் திருப்பித்தாக்கலாம் ; அதற்காக இந்த முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

சென்ற மூன்று மாதங்களாக, வெடிகுண்டு சாமான்கள் செய்வதற்கு உபயோகப்படும் எந்தப் பொருளும் பிரிட்டனிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை என்று உறுதியாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் வர்த்தகர்கள் ஜப்பானுக்குச் சாமான்கள் ஏற்றுமதி செய்வதாயிருந்தால், 'லைசன்ஸ்' அனுமதியில்லாமல் ஏற்றுமதி செய்யக்கூடாது என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்தரவிட்டிருந்தார்கள். அந்த உத்தரவுக்குப் பிறகு, யாருக்கும் 'லைசன்ஸ்' கொடுக்கவில்லை ; இனிமேலும் 'லைசன்ஸ்' கொடுக்கப்படமாட்டாதென்று தெரிகிறது.

சென்ற வருஷம் மே மாதம் 10-ந்தேதி, ஜப்பான் தனக்குச் சில விளைபொருள்கள் வேண்டுமென்று டச்சுக் கிழக்கிந்திய தீவுகளைக் கேட்டதாக, ஒரு டச்சு அரசாங்க நிபுணர், லண்டனிலிருந்து டச்சு மக்களுக்குச் செய்த ஒரு ரேடியோ பிரசங்கத்தில் கூறினார். ஜெர்மனி ஹாலந்தின்மேல் அப்போது தான் படையெடுத்தது. ஜப்பான் கேட்டவைகளைக் கொடுத்தால், டச்சுக் கிழக்கிந்திய தீவுகள் ஜப்பானுக்குப் பொருளாதார அடிமையாவதோடு அல்லாமல், அவ்விளைபொருள்கள் ஜெர்மனிக்குப் போவதற்கு உதவி செய்தது போலாகும். ஆகையால் நெதர்லாந்து அரசாங்கம் ஜப்பான் கேட்டவைகளைக் கொடுக்கமறுத்துவிட்டதென்று, அந்த நிபுணர் அறிவித்தார்.

### கப்பல் நிலைமை.

சென்ற ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பல ஜெர்மன் கப்பல்களும், இத்தாலியக் கப்பல்களும், முழுகடிக்கப்பட்டன. எதிரிகளால் முழுகடிக்கப்பட்ட பிரிட்டிஷ் கப்பல்களும், நேசக் கப்பல்களும், இதில் மூன்றில் ஒரு பாகம் தான் என்று பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பார்லிமெண்டில் செய்த பிரசங்கத்தில் அறிவித்தார்.

### இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்.

மத்திய தரைக்கடலுக்கு மேற்குமுனையில் உள்ள ஜிப்ரால்டர் அதிகமாக பலப்படுத்தப்பட்டுவருகிறது என்று ராய்ட்டரின் விசேஷ நிருபர் கூறுகிறார். பூமிக்கடியில் ஒரு பட்டணம் ஏற்பட்டிருக்கிறது. மலையைக் குடைந்து பூமிக்கடியில் கட்டப்பட்ட கோட்டை எதிரிகளுக்கு ஒரு பெரும் தடையாயிருக்கிறது. பிரிட்டனுக்கும் ஜிப்ரால்டருக்கும் ரேடியோ சம்பந்தமாக அடிக்கடி பேச்சு நடக்கிறது. சகல யுத்த முஸ்தீப்புடன் கூடிய ஏராளமான சிப்பாய்கள் ஜிப்ரால்டரில் நிறைந்திருக்கிறார்கள் என்று அந்நிருபர் கூறுகிறார்.

### அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

மூன்று அமெரிக்கக் கப்பல்களை ஜெர்மானியர்கள் முழுகடித்துவிட்டார்கள். அதன் விவரங்களையும், அமெரிக்கா இனிமேற் செய்யக்கூடியதைப்பற்றியும், இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ள ஒரு கட்டுரையில் காணலாம்.

### நடு நிலைமை நாடுகள்.

ஸ்வீடன் எம்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும் என்பதைபற்றி மேஜர் குஸ்லிங் கூறிய வார்த்தைகளைக் கண்டித்து ஸ்டாக்ஹோம் (ஸ்வீடனிலுள்ளது) ரேடியோ கூறியிருக்கிறது. ஸ்வீடன் எம்மாதிரி நடந்துகொள்ளவேண்டும் என்று பிறகு கூறவேண்டிய அவசியமில்லை என்று மேஜர் குஸ்லிங்குக்கு அறிவுறுத்தப்பட்டது.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.